பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 21 செவ்வாய்க்கிழமை (04-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 157

# ஜனாதிபதி தெரிவில் சு. க. போட்டியிடாது!

## விஜேயதுங்கவுக்கே வாய்ப்பு

கொழும்பு, மே 4

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றில் நடைபெறும் ஜனாதிபதித் தெரிவின்போது வேட்பாளர் எவரையும் நிறுத்தாது. இதனால் ஆளும் கட்சியின் சார்பில் இப்பதவிக்கு நிறுத்தப்படும் பதில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவே ஜனாதிபதியாவார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதி தெரிவின்போது ஒரு வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நிறுத்துவது என ஸ்ரீ ல-சு க முடிவு செய்திருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று மாலை நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வேட்பாளர் எவரையும் நிறுத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்றம் இன்று காலை 9 மணிக்கு கூடும்போது ஜனாதிபதி பதவி வெற்றிடமாக உள்ளது குறித்து அறிவிக்கப்படவிருக்கிறது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## உடன் தேர்தல் நடத்த ஸ்ரீ.ல.சு.க. கோரிக்கை

நாடாளுமன்றத்தில் நடைபெறும் தேர்தலில் ஜனாதிபதியைத் தெரிவு செய்து, பின்கதவால் ஆட்சிக்கு வரும் ஒழுங்கற்ற முறையை தொடர்ந்தும் ஆதரிப்பதில்லை என்று ஸ்ரீ.ல.சு.க அறிவித்துள்ளது.

உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, மக்கள் விருப்பத்துடன் புதிய அரசொன்று பதவிக்கு வருவதற்கு வாய்ப்பளிக்குமாறு அக்கட்சி கோரியிருக்கிறது.

இதன் மூலம் மீண்டும் நாட்டில் நாடாளுமன்ற ஆட்சி முறை ஏற்படுவதற்கு வழிசெய்ய வேண்டும் என்றும் அக்கட்சி கேட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒழுங்கீனங்களும், ஊழல்களும் ஏற்பட்டன. அத்தேர்தலில் உருவான பதவியின் வெற்றிடத்தை நிரப்ப தமது கட்சி தயாராக இல்லை என்று அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பிரதம மந்திரியாக ரணில்; பாதுகாப்பு அமைச்சர் கூரே

பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்காவையும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவிக்கு சிறிசேன கூரேயையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு பத்திரிகையாளர் ஒருவரை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. சிங்கள சேவை இத்தகவலை வெளியிட்டது.

பிரதமர் பதவிக்கு சிறிசேன கூரே நியமிக்கப்படுவார் என முன்னர் வெளியான செய்தி தவறானது என பி. பி ஸி: அறிவித்தது:

## வன்செயல்சம்பவங்கள் இடம்பெறவில்லை!

லண்டன், மே 4

ஜனாதிபதி பிரேமதாஸா கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக பெரும் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பி பி.ஸி தெரிவித்தது-

மக்களை அமைதியாக இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

அப்பாவி மக்களை பாதுகாப்பதற்கு சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

[உ-3]

## தடுத்து நிறுத்திய போது குண்டு வெடித்தது!

சைக்கிளில் வந்த தற்கொலைப் படை நபரை ஜனாதிபதி பிரேமதாஸாவின் அந்தரங்க உதவியாளரான முகைதீன் பிடித்துத் தடுத்து நிறுத்திய போதே, அந்த நபர் வைத்திருந்த குண்டு வெடித்தது.

இவ்வாறு பொலீஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## இந்திய உப ஜனாதிபதி வருவார்

புதுடில்லி, மே 4

ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் இந்தியாவின் சார்பில் உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணனும், வெளியுறவுத் துறை இணை அமைச்சர் பாட்டியாவும் கலந்து கொள்வர். (அ-க)

## மீட்பு நிதி நாளை செலுத்தலாம்

யாழ்ப்பாணம், மே 3

இது வரை தமிழீழ மீட்பு நிதி செலுத்தாதோர் அதனை நாளை பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் வைத்துச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நாச்சிமார் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 4

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோவில்) தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

வசந்த மண்டபப் பூசை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். அம்பாள் 9 மணிக்கு தேரேறி அடியார்களுக்கு அருட்காட்சி தருவாள் பிற்பகல் 3 மணிக்கு அம்பாள் தேரிலிருந்து அவரோகணம் செய்வாள்.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு நண்பகல் 12 மணிக்கு அன்னதான நிகழ்ச்சி நடைபெறும்.

(தேர்த்திருவிழா சிறப்பிதழ் உள்ளே)

## கொலையாளி அடையாளம் காணப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, மே 4

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவை வெடிகுண்டு மூலம் கொலை செய்த தற்கொலைப் படை நபர் யார் என்பதை பொலீஸார் கண்டு பிடித்துள்ளனர்.

எனினும் அந்த நபரின் பெயரைத் தற்போது வெளியிட முடியாது என்று பொலீஸார் கூறியதாக அரசுச் செய்தி நிறுவனம் ஒன்று நேற்று மாலை தெரிவித்தது

ஆனால் —

கொலையாளி எனச் சந்தேகிக்கும் 14 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவனின் படத்தை பொலீஸார் நேற்று வெளியிட்டனர்.

மேற்படி செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலின் படி—

கொலையாளி திரு பிரேமதாஸாவின் வீட்டுக்கு அருகிலேயே இரண்டு ஆண்டுகளாகத் தங்கியிருந்ததாக அவன் தங்கியிருந்த விடுதியின் உரிமையாளர் தெரிவித்திருக்கின்றார்.

குண்டுத் தாக்குதலில் துண்டிக்கப்பட்ட கொலையாளியின் தலையை தொலைக்காட்சியில் இலங்கை அரசு காட்டியதை அடுத்து அந்த விடுதியின் உரிமையாளர் கொலையாளியை அடையாளம் கண்டு பிடித்ததாகவும் —

கொலையாளி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இல்லாததால் நரசிம்மராவ் வரவில்லை

லண்டன், மே 4

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இலங்கைக்குச் சென்று ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற திட்டமிட்டிருந்தார் என்றும்—

ஆனால் அங்கு அவருக்கு பாதுகாப்பு அளிப்பதில் பிரச்சினைகள் பல உள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து நரசிம்மராவின் விஜயம் ரத்துச்செய்யப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது [உ-3]

## தேசிய அரசு அமைத்தால் காமினியின் கட்சி ஆதரிக்கும்

கொழும்பு, மே 4

தேசிய அரசாங்கம் ஒன்றும் அமைக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவதற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுதியளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது

"ராவய" ஆசிரியர் விக்டர் ஐவன் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இது குறித்துப் பிரஸ்தாபித்தார்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் வரை அமைக்கப்படும் அரசாங்கத்துடன் ஜ ஐ. தே. முன்னணி ஒத்துழைக்கும் சாத்தியமில்லை —

நாட்டு நலன் கருதி அனைத்துக் கட்சிகளும் அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஜ. ஐ. தே. முன்னணி தனது ஆதரவை வழங்கும். இதுவே அக்கட்சியின் இப்போதைய நிலைப்பாடாக உள்ளது என்றும் திரு ஐவன் தெரிவித்தார். (அ-6)

அதிகாலையில் வட்டமிட்ட மர்ம விமானம்!

# ஜெயலலிதா வீட்டை புலிகள் விமானம் மூலம் தாக்கலாம்!

## தமிழக அரசு அஞ்சுகிறது

சென்னை, மே 4

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் இல்லத்தை விமானம் மூலம் புலிகள் தாக்கலாம் என்று தமிழக அரசு அச்சம் தெரிவித்திருக்கிறது.

நேற்று அதிகாலை அடையாளந் தெரியாத இலகுரக விமானம் ஒன்று ஜெயலலிதாவின் வீட்டுக்கு மேலே இரண்டு மூன்று தடவைகள் வட்டமிட்டதை அடுத்து மாநில அரசு இந்த அச்சத்தை வெளியிட்டிருக்கிறது.

அந்த மர்ம விமானம் மிகவும் மெல்லிய சத்தத்துடன் வெளிச்சமின்றிப் பறந்ததை முதலமைச்சரின் பாதுகாப்புப் படையினர் அவதானித்தனர் என்று தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவது பற்றி ஆராய மாநிலத்தில் தலைமைச் செயலாளர் அவசர மாநாடு ஒன்றை அழைத்திருக்கிறார்.

தமிழக பொலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் இந்திய விமானப்படை தாம்பரம் நிலையத் தளபதி ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்தனர்.

(உ-எ)

## விமான எதிர்ப்புக் கருவி முதல்வர் வீட்டுக்குத் தருக!

### தமிழக அரசு கோருகிறது

சென்னை, மே 4

விடுதலைப் புலிகள் விமானம் மூலம் தாக்கக்கூடிய அபாயத்தைக் கருதி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் இல்லத்தில் விமான எதிர்ப்பு வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் இல்லத்துக்கு மேல் உள்ள வான் பிராந்தியத்தை பாதுகாப்பதற்கும், கண்காணிப்பதற்கும் மத்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் — எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தக்கூடிய சாதனங்களை முதலமைச்சரின் இல்லத்தில் அமைக்கவேண்டும் என்றும் மாநில அரசு மத்திய

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனில் இணைந்த இரண்டாம் வருட

## நினைவஞ்சலி



மலர்வு: 21 — 11 — 1920

உதிர்வு: 05 — 05 — 1991

திருமதி

### மரியமுத்து மார்சலீன்பிள்ளை

" ஜீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள் "

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 1993 05-05 புதன் கிழமை காலை 7-30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் பங்கு கொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(25522)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் டாக்டர்

### நடராஜா விஜயேந்திரன் J. P.

(கைதடி, அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியும், அகில இலங்கை சமாதான நீதிபதியும்)

அன்னையின் மடியில்: **02 — 07 — 1944**

இறைவனடியில்: **18 — 04 — 1989**

திதி: **04 — 05 — 1993**

எங்கள் குடும்பத்தின் ஞான விளக்காக, அன்பூற்றாக விளங்கி, தமிழ் இனத்தினதும், சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டுப் பணியாற்றிய டாக்டர் ந. விஜயேந்திரன், நாம் கதறிக் கலங்கும்படி எம்மைவிட்டுப் பிரிக்கப்பட்டு, ஆண்டு நான்கைக் கடந்துள்ளது. வேதனையில் உழலும், எங்கள் இதயங்களில் அன்னாரின் தரிசனம் கணம்தோறும் கிடைத்துத் தினம் நாம் செலுத்தி வரும் கண்ணீரஞ்சலியை நினைவு கூர்ந்து கண்ணீரோடு சிரம் தாழ்த்துகிறோம்.

உங்கள் நினைவால் வாடும்,
மனைவி - விமலா விஜயேந்திரன்.
பிள்ளைகள் - ஜனகன், ஜயந்தன், ஜெனனி.
மற்றும் குடும்பத்தினர்.

'சிவஸ்தான்'
நல்லூர், யாழ்ப்பாணம். (25515)

## ஆலயங்களில்

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். (அ)

o o o

நல்லூர் கைலாசபிள்ளையார் தேவஸ்தான விநாயகருக்குரிய வருடாந்த மகோற்சவத்தில் இன்று தேர்த் திருவிழா நடைபெறும். காலை 7-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி விநாயகப் பெருமான் 9மணிக்கு தேர்ப் பவனியை ஆரம்பிப்பார். (அ)

o o o

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் சந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும் நாளை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். [க]

o o o

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று செவ்வாய் காலை 8 மணிக்கு நடைபெறும். (த)

o o o

நீர்வேலி கந்தசுவாமி கோயில் ரதோற்சவம் நாளை காலை 8 மணிக்கு நடைபெறும். [உ-72]

o o o

ஆனைக்கோட்டை உயரப்புலம் தித்தங்க விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று இடம்பெறும். தொடர்ந்து மாலை சமய அறிவுப்போட்டி இடம்பெறும் [உ-100]

o o o

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய ரதோற்சவம் நாளை நடைபெறும். (உ-100)

o o o

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

o o o

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் வருடாந்த சித்திரைக் கஞ்சி வார்ப்பு நிகழ்ச்சி இன்று பகல் நடைபெறும் (உ-72)

o o o

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை ஒட்டி கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் நடத்திவரும் கம்பராமாயணத் தொடர் விரிவுரையில் இறுதி நாளான இன்று "அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற பொருளில் விரிவுரை இடம்பெறும். [உ-100]

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு பௌர்ணமிப் பூசை ஆரம்பமாகும். (க-245)

o o o

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூத நாத சுவாமி தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க் கிழமை பிராயச்சித்தபிஷேகமும், சித்திரபுத்திர நாயனார் கதைப் படிப்பும், சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம் பெறும். [க]

o o 0

தெல்லிப்பழை கோவிற் புலம் அண்ணாமார் (சிவன்) ஆலயத்தில் நாளை புதன் கிழமை சித்திரைப் பூரணை விழாவை ஒட்டி காலை 6 மணிக்கு விசேட அபிஷேக பூசையும் சுவாமி வெளி வீதி வருதலும் நண்பகல் 12 மணிக்கு மகேசுவர பூசையும் சித்திரைக் கஞ்சி வார்ப்பும் நடைபெறும் (க)

o o o

கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு 'ஆலய வழிபாடு' எனும் பொருள் பற்றி செல்வி குமுதினி தங்கவேல் உரையாற்றுவார். இந்த நிகழ்ச்சிக்கு திரு. சி. பொன்னம்பலம் தலைமை வகிப்பார். [க]

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

### உயர் திரு. இரா. சுந்தரலிங்கம்

அவர்களுக்கு

## ★ 'மணி விழா' ★

காலம் : 1993 - 05 - 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 5 - 30 மணி
இடம் : இணுவில் கந்தசுவாமி கோயில்
தலைவர் : கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

சமயப் பெரியார்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செ. சோதிப்பெருமான்
செயலாளர்,
விழாக் குழுவினர் சார்பாக

இணுவில்,
1993 - 04 - 29.

குறிப்பு : பிற்பகல் 4.00 மணிக்கு ஊர்வலம் இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் இருந்து ஆரம்பமாகும்.

(சி-5083)

உ

## வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரைப் பூரணை விழா

பூர்வதனுக்கோடி எனச் சிறப்பித்துப் போற்றப்படும் வில்லூன்றித் திருத்தலத்திற்கு பெருமை தரும் இதிகாச காலப் புகழ்பெற்ற வில்லூன்றி புனித தீர்த்தமும், அதன் சுற்றாடலும் மீண்டும் நன்னிலைப்படுத்தப்படுவதனால், எதிர்வரும் **05 05-1993** புதன்கிழமை சித்திரைப் பூரணை தினத்தன்று, நாற்பதாண்டு கால இடைவெளிக்குப் பின், வில்லூன்றி விநாயகர் புனித தீர்த்தத்திற்கு தீர்த்த வாரி கொள்ள எழுந்தருளும் பெருவிழா நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளதென்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம்

### நிகழ்ச்சி நிரல்

அதிகாலை 6-00 வசந்தமண்டபப் பூசை
காலை 6-45 கோபுர வாயிலில் தரிசனம்
காலை 7-00 பெயர்ப்பலகை திறந்துவைத்தல்
திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
காலை 7-10 புனித தீர்த்தத்திற்கு சுவாமி எழுந்தருளல்
(பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் கலந்து கொள்வார்கள்)
காலை 7-30 புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி
காலை 8-30 சுவாமி கோவிலுக்கு- எழுந்தருளல்.

தொடர்ந்து ஆலய மண்டபத்தில்
பொதுக் கூட்டம்

தலைவர்: திரு. க. குணராசா அவர்கள்
(உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

1. திருமுறை ஓதல்
2. தலைமையுரை
3. அருளாசியுரை:
   (அ) நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்,
   (ஆ) ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள்
4. சிறப்புரை:
   (அ) திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் (மாவட்டப் பிரதி ஆணையாளர்)
   (ஆ) கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் (தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
   (இ) திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்கள் (ஆணையாளர், யாழ். மாநகரசபை)
5. சொற்பெருக்கு:
   அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்கள்,
   பொருள்: 'தெய்வம் என்பதோர் சிந்தை'
6. நன்றியுரை:
   திரு. ஆ. பொ. குலசிங்கம் அவர்கள் (செயலாளர், தர்ம பரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்)

இங்ஙனம்,
தர்மபரிபாலன சபை.

வில்லூன்றி தேவஸ்தானம்,
01 - 05 - 1993

பிரபல பத்திரிகை முகவர் அமரர் ஆ. சி. நடராசா அவர்கள் ஞாபகார்த்த அன்பளிப்பு.

(25511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



### இராசரத்தினம் தவநேசன்

தோற்றம்: 08 - 10 - 1953

அழிப்பு: 13 - 05 - 1989

திதி: 04 - 05 - 1993

ஆண்டு நான்காகிடினும் உம் நினைவு நம் மனதை விட்டகலாதையா.

இந் நாளில் உமது ஆத்ம சாந்திக்காகப்- பிரார்த்தி கின்றோம்:

மனைவி, பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம். [25519]

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரத்தினம் விசுவலிங்கம்

அன்னை மடியில்: 19 — 01 — 1932

இறைவன் அடியில்: 15 — 04 — 1992

திதி: திரயோதசி 04 — 05 — 1993

எங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத்தெய்வம் எம்மை யெல்லாம் விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும், எங்களின் இதயங்களில் என்றென்றும் ஒளியாய் வீற்றிருக்கும் தெய்வம் நீங்களம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எங்கள் குலதெய்வம் ஸ்ரீ பத்திரகாளித் தாயாரை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கணவன்- கை. விசுவலிங்கம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (25[illegible])

## சுவர்ண பூமி திட்டத்தின் கீழ் காணி உறுதி

தென்மராட்சி, மே 4

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள தர்மக்கேணி, மாசார் குடியேற்றத் திட்டங்களில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு சுவர்ண பூமித்திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து காணி உறுதிகளை வழங்கினார்.

சங்கத்தார் வயல் குடியேற்றத் திட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களது உறுதிகளை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலா வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

(இ-117)

## நன்கொடை

தெல்லிப்பழை, மே 4

வலி-வடக்கு பிரதேச சபையின் கீழ் வரும் சனசமூக நிலையங்களுக்கு 92ஆம் ஆண்டுக்கான நன்கொடை வழங்கப்பட்டு வருகின்றது

மேற்படி சனசமூக நிலையங்கள் தமது செயற்பாடுகள் சம்பந்தமான ஆவணங்களை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து நன்கொடைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று வலி-வடக்கு பிரதேசசபை செயலாளர் திரு. எஸ். இராசசிங்கம் தெரிவித்தார் (த-68)


SPECIAL ENGLISH COURSE

விசேட ஆங்கில மொழி கற்கை நெறி

ஆரம்பம்:
05 — 05 — 1993
பி. ப. 2மணி

ஆசிரியர்:
த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு:
நிர்வாகி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்
(சி-4985)

CHEMISTRY —
திரு சிவசோதி
PAPER CLASS
செவ்வாய் வியாழன் ] 4-30
ஆரம்பம்:
04 — 05 — 1993
BOND
யாழ்ப்பாணம்
(சி-5078)

NEW ENGLISH ACADEMY
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

★ G. A. Q.
(English (E. S. L.)
1993 (July)

★ Spoken English With Grammar

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
புதன் 05 05 1993
வியாழன் 06 05 1993
By R. SIVALINGAM.
(Dip - in - English)

குறிப்பு:
நேர அட்டவணை மாணவர்களின் வசதிக்கேற்ப வழங்கப்படும்.
(சி-4[illegible])

BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கணிதம் — விஞ்ஞானம் — தமிழ்
சமூகக்கல்வி — ஆங்கிலம் — சமயம்
வர்த்தகம் — விவசாயம் — சித்திரம்
சங்கீதம் — நடனம் — மனைப்பொருளியல்

ஆகிய பாடங்களுக்கான
O/L DAY CLASS
EVENING CLASS

★ சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நாட்களில் எமது வழமையான ஆசிரியர் குழுவுடனும், மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடனும்

ஆரம்பம்: 02-05-1993
(சி 5080)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இறுதிப் பிரிவு
O/L DAY CLASSES
ஆரம்பம்: 06-05-1993
(8.00 — 2.00)

★ அனுமதிக்கு முந்துங்கள். (சி-4979)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக ஸ்தாபக உறுப்பினர்
லயன் டாக்டர்
இ பாக்கியநாதன் அவர்களுக்கு
எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

(25513) - கோப்பாய் லயன்ஸ் கழகம்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 06 1914

மறைவு: 02 — 05 — 1985



திருமதி
### உருக்குமணி இராசரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை, வேலணை)

திதி: 04 05 1993

வேலணையூர் ஐயனார் பாடசாலை
விளங்கவெகு மதியோடு காணியீந்து;
பாலகர்க்குப் பாலுணவு நிலைய மூரிற
பலவாக்கிப் பசித்தவர்கள் முகபார்த் தூட்டி,
ஏலவே ஆசிரிய சேவை யாற்றி,
இளைப்பாறி; விவசாயச் செழிப்புங் கண்டு,
காலமாய் உருக்குமணி ஈர்நான் காண்டு
கடமையெலாம் நினைந்துமலர் சூட்டுவோமே!

(உற்றார், உறவினர், நண்பர்களை நிகழ்ச்சியில் பங்குபற்ற அழைக்கிறோம்)

மக்கள், மருமக்கள், பேரமக்கள்,
பூட்டிமார் சார்பில் வைத்திய கலாநிதி
சி இராசரத்தினம் J. P
(கணவர்)

121, 2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (25510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை
தேரேறி வரும் இந்நாளில்
தமிழீழம் விடிவதாக!

**நியூலக்கி ஸ்டார் ஜுவல்லறி**
229ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**★ பீ. ஜ. பர்னான்டோ ★**
(போதனா வைத்தியசாலை முன்பாக)
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ரஞ்சினி ரயர் வேக்ஸ்**
1006, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்) சிவா

**ரவி மோட்டோர்ஸ்**
245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வையகம்**
768, கே. கே. எஸ். வீதி,
தட்டா தெருச்சந்தி, வண்ணார்பண்ணை.

**ரூபி நகை மாளிகை**
111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ராஜா கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சாந்தி அச்சகம்**
575, கே. கே. வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**சோபிகா நகை மாளிகை**
111,1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லலிதா நகை மாளிகை**
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறி அமலா நகை மாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மைதிலி ஜுவல்லர்**
190ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூலலிதா ஜுவல்லர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கே. கே. இராசரத்தினம்**
நகை மாளிகை
277 (129), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பென்ஷன் ஹவுஸ்**
65, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

**ரதி பென்ஸி ஹவுஸ்**
53, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

**அம்பிகாபதி பான்ஸி றேடர்ஸ்**
9ஏ, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

**ஆறுமுகம் சிற்பாலயம்**
(உரிமை: ஆ. சிவரத்தினம்)
பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி.

## விஸ்வகுல மக்கள் வழ

இலங்கைத் தீவின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாண நகரத்தில், வண்ணார் பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயம் நாச்சிமார் கோவில் எனவும் வழங்கும்.

இவ்வாலயத்தைப்பற்றி விரிவான சரித்திர சாதனங்கள் இல்லாதிருந்த போதிலும் பண்டைய பாடல்கள் சிலவற்றிலிருந்தும், 1898ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்களால் சைவ சமய, கிறீஸ்தவ கோயில்களின் பதிவு இடாப்பு தயாரிக்கப்பட்ட பொழுது இருந்த சில விவரங்களைக் கொண்டும், கிராம மக்களிடையே வழங்கி வரும் ஐதீக வரலாறுகளை ஆதாரமாகக் கொண்டும் நாம் அறியக் கூடிய சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

''கங்கையார் சடையானைக்
காசினியில் பூசனை செய்
மங்கையார் காமாட்சி –
மாதேவி மருவுமிடஞ்
செங்கையால் நாச்சிமார்
சிறு விறகை யொடித்தாளின்
கொங்கையாய்ந் தொளிர்
வண்ணை குளங்கரைசார் –
மருதடியே''

விஸ்வப் பிரம்மகுல விஸ்வக்ஞ திலகர் அமரர் ஸ்ரீநமசிவாயம் சிவக்கொழுந்து (உயர் நீதி மன்ற நியாயதுரந்தரர்) அவர்களால் ஸ்ரீகாமாட்சியம்மை பேரிற் பாடிய பதிகம் இவ்வாறு பகர்கிறது.

அக்காலத்தில்- தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் குளங்கரையைச் சூழ நற்கனி தரும் நாவல் மரங்களும், பாரிய மருதமரங்களும் அதனைச் சூழ வயல்களும் செறிந்தாக இருந்தது. இப்பகுதியில் விஸ்வேஸ்வரனது அடியவர்களான விஸ்வப் பிரம்மகுல விஸ்வக்ஞ மக்கள் (பொற் தொழிலாளர்) வாழ்ந்து வந்தார்கள்.

குளங்கரை மருதடிச் சுற்றாடலில் விறகு சேகரிப்பவர் அநேகர். அன்றொருநாள் உச்சிவேளையில் விறகு சேகரிப்பதற்கு பருவ மங்கை ஒருத்தி சென்றாள், இயற்கையின் உபாதையினால் உந்தப்பட்டு சிறுநீர் கழிப்பதற்கு மருதமரத்தடியில் இருந்தாள். அந்த இடத்தை அசௌசப் படுத்தியதால் அவ்விடத்தில் இருந்த தேவதை சிற்றங் கொண்டு அவளை பயங்கரமான முறையில் கொங்கைகளைத் திருகியது போன்ற ஒரு வேதனை உண்டாயிற்று. அவள் உடல் நடுங்கி சேகரித்த விறகையும் விட்டு வீடு நோக்கி ஓடினாள். அச்சத்தின் நிமித்தம் மெல்லிய சுரம் கண்டது.

இதையறிந்த அச்சுற்றாடலில் வாழ்ந்த விசுவக்ஞகுல வயோதிப மாது கண்ணாத்தை என்னும் பெயருடையாள் அந்த நோயுற்ற கன்னிகையை தேற்றினாள். தனது முதிர்ந்த அனுபவத்தால் தெய்வக் குறையை நீக்க நீராடி நீறணிந்து மருதமரத்தடியில் ஒரு கல்லினை வைத்து பொங்கிப் படைத்து விளக்கேற்றி பூசனை செய்து அவ்வினையைப் போக்கிக் கன்னிகையைக் காப்பாற்றினாள்.

அத்தேவதையை சாந்தப் படுத்தும் நோக்கமாக ''நாச்சிமார்'' எனப் பெயரிட்டு வழிபாடு செய்து வந்தார். இதனைத் தொடர்ந்து, கிராம மக்களும் வழிபாடு செய்தனர். இவ்வழிபாட்டால் அருளையும், ஆசியையும் பெற்ற அக்கிராம மக்கள் அதன் மகத்துவத்தை உணர்ந்து விக்கிரக வழிபாடாக மாற்றியமைக்க ஆயத்தங்கள் செய்து, சிறுகல் கட்டடமாக 1870ஆம் ஆண்டில் திரு. காசிநாதர் தம்பர் அவர்களால் சிறு கோவில் கட்டப்பட்டது.

### முதலில் மாரியம்மன்

அங்கு மாரியம்மன் கற்சிலையை பிரதிஷ்டை செய்தார்கள். அந்த ஆலயத்தின் தவ விருட்சம மருது அந்த இடத்தைச் சூழ விஸ்வகுல விஸ்வக்ஞ மககள் சூழ்ந்து வாழ்ந்தபடியால் அவர்களின் குல தெய்வமாகிய காமாட்சி அம்பாளையே வைத்து வழிபாடு செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயம் பின்னர் ஏற்படத் தொடங்கியது பின் காமாட்சி அம்பாளையே பிரதிஷ்டை செய்தும் வைக்கப் பட்டது.

அக்காலத்தில் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியில் வசித்து வந்த விஸ்வகுலப்பெரியார் திரு.க.வயித்திலிங்கப் பத்தர் அவர்கள் (பூனூல் வயித்திலிங்கப் பத்தர்) இந்திய யாத்திரையை மேற்கொண்டார். அவர் சுவாமி மலையில் இருந்த பிரபலமான சிற்பாச்சாரியார் திரு. கண்ணையா ஆச்சாரியார் அவர்களைச் சந்திக்கும்



வாய்ப்பும் ஏற்பட்டது. அப்பொழுது ஆச்சாரியார் அவர்கள் தமது வயது முதிர்ந்த காலத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும், கைத்திறனைக் கொண்டும் காஞ்சி காமாட்சி அம்பாளின் அம்சங்களைக் கொண்ட கற்சிலை ஒன்றை உருவகப்படுத்தி (சிலை அம்சம்) உள்ளதாகக் கூறினார்.

தேவியின் இடது கைகளில் ஒன்றில் பாசமும், மற்றொன்றில் கரும்பும், வலது கைகளில் ஒன்றில் அங்குசமும், மற்றொன்றில் நீலோற்பவ புஸ்பமும் உள்ளன. அன்பையும், அருளையும் பாசமும், செழுமையையும, உண்மையையும் நீலோற்பவ புஸ்பமும், அசுர சக்தியை அடக்கும் தீரத்தை அங்குசமும், மன்மதனை வென்றதை கரும்பும் குறிப்பிடுகின்றன.

இச்சிலையை விஸ்வப்பிரம்ம குல விஸ்வக்ஞ மக்களுக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும் என்று எண்ணங் கொண்டு இருந்ததாகவும், எனவே தான் செய்த சிலையை யாழ்ப்பாண விஸ்வப் பிரம்ம குல விஸ்வக்ஞ மக்களுக்கு வழங்க விருப்பம் கொண்டுள்ளதாகவும், வயித்திலிங்கம் பத்

தர் அவர்க...
தமது பேர...
தாகவும் கூ...
ஆலய மூலஸ்...
தருளியிருக்...
அம்மன் க...
கண்ணையா...
அன்பளிப்பா...
மறைத்து...
திப்பி...

மேற்படி...
பாணம் கொ...
பதற்கிடையி...
களின் கருத்...
நிமித்தம்...
இருந்த மா...
சிலையை அ...
இடத்தில் ம...
ருந்தபோ...
திப்பற்றி எ...
தின் நிமித்...
சிலையை இ...
ஆலய திரு...
றில் வீசிவிட்...
கிரமத்தில் கி...
இறைக்குப்...
வெளிப்பட்ட...
அங்கங்களில்...
இருந்தபடியா...
தகுதி இல்...
கடலில் சேர்...

பின்பு பு...
கற்சிலை ஒ...
தற்போது...
இருக்கும் இ...
திஷ்டை செ...
தார்கள். இ...
நலன்கருதி...
டில் மாரியம்ப...
ஓர்] ஆலயம்...
யம்மாளின்...
புற நடைபெ...

இவ்வாலய...
காமாட்சி அ...
என்றும், வ...
குளங்கரை...
காமாட்சி அ...

### ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் செய்தி

சைவ மக்களாகிய எமக்கு ஆலய வழிபாடு மிகவும் அவசியம். ஆலய வழிபாட்டை முறையாகச் செய்து வருபவர்கள் சிறந்த ஆத்ம பலத்தை பெறுகின்றனர். மகோற்சவம் தான் இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்கள் 5தொழில்கள்) என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அவை: படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பனவாகும். இவற்றில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கும். பூமியை தேராகவும், சந்திர சூரியரைச் சில்லுகளாகவும், வேதங்களை குதிரையாகவும், பிரம்மாவைத் தேர்ப்பாகனாகவும் கொண்டு முப்புரங்களையும், தகனம் செய்து மூன்று அசுரர்களையும் சங்காரம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் சித்திரத் தேர் ஏறி பவனிவரும் காட்சியை காணக் கிடைப்பதும் நாம் அனைவரும் செய்த பெரும் புண்ணியமே ஆகும் அம்பாளின் பூரண கிருபா கடாச்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

விஸ்வஸ்ரீ இ. வே. கந்தசாமி,
தலைவர்,
ஆலய தர்மகர்த்தா சபை

எ...
மருது,...
மங்...
இருந்த...
இ...
கோவில்...
கா...
ஆவின்...
ஆ...
இராம...
இட...
கிராமத்...
கி...
(விடியல்...
வி...
கொடிய...
கே...
வண்ணை...
வழ...
எண்ண...
எ...

தேரேறி வரும் காமாட்சி அம்பாளின் அருள் பெற்றுய்வோமாக!

**☆ கரன் வர்த்தக ஸ்தாபனம் ☆**

772, காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாள் (நாச்சிமார்) (கோவில்) ரதோற்சவ மலர்

# ...படும் அருள் பொழியும் தலம்

...ந்திப்பு
...த் தீர்ப்ப
...ப்போது
...தில் எழுந்
...ாமாட்சி
...யை திரு.
...சாரியார்
...டுத்தார்.
...5 இடம்
...து
...ப யாழ்ப்
...த்து சேர்ப்
...சில மக்
...பாட்டின்
...டத்தில்
...மன் கற்
...வறு ஒரு
...வைத்தி
...த இடம்
...அச்சத்
...ரியம்மன்
...இரவாக
...கிணற்
.... காலக்
... நீலர
... சிலை
...லையின்
...பாடு
...ப்பதற்கு
...று வட
...டார்கள்.
...யம்மன்
...ருவாக்கி
...ஆலயம்
...ல் பிர
...த்து வந்
...களின்
...ஆண்
...னியாக
...து மாரி
...சி சிறப்
...கின்றது.
...ணை ஸ்ரீ
...ஆலயம்
...ண்ணை
...டி ஸ்ரீ
...ஆலயம்

என்றும், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் என்றும், யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயம் உள்ள நிலையம் ''குளங்கரை மருதடி'' என உறுதிச்சாதனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி. பி 1870-ஆம் ஆண்டிலிருந்தே கோயிலுக்கு நிலங்கள் முறைமையாகத் தரும சாதனம் செய்யப்பட்டிருப்பதை சாதனங்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது. இக்கால எல்லைக்கு முன்னுள்ள விபரங்கள் எழுத்திற் காணக்கூடியதாகவில்லை கி. பி. 1870, 1887, 1893, 1912, 1933, 1969, 1979 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவ உறுதிச் சாதனங்கள் இருக்கின்றன. இக் கோயில் ஆதீன மகா சபையாரால் முறைமையாக நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. ஆதி பஞ்சாயத்தார்களின் நிர்வாக காலத்தில் ஆலயம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

### சைவாகம கிரியைகள்

இவ்வாலயத்தில் சைவ ஆகம முறைப்படி கிரியைகள் யாவும் நடைபெற்று வருகின்றன. கி. பி. 1887, 1926, 1967, 1986 ஆகிய ஆண்டுகளில் மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இராஜகோபுர கும்பாபிஷேகம் 1986ஆம் ஆண்டில் நடைபெற்றது.

1967ஆம் ஆண்டில் நடந்த கும்பாபிஷேகத்தின் பின் உற்சவங்கள் பதினைந்தாக கூட்டப்பெற்றன உதயம், காலை, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்து கால நித்தியபூஜைகள் நடைபெறுகின்றன.

வருடா வருடம் சித்திரை பௌர்ணமிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். வண்ணை சந்தர் உடையார் அர்களால் திருக்குளம் நிர்மாணிக்கப்பட்டது. மாதாந்தம் பௌர்ணமி தோறும் திருவிளக்கு சுமங்கலி



பூசைகள் நடைபெற்று வருகின்றது திருவிளக்குப் பூசை 1973இல் ஆரம்பிக்கப்பட்டது. கிழமை தோறும் சுக்கிரவார விழாக்களும் நடைபெற்று வருகின்றன. புரட்டாதி மாதத்தில் நவராத்திரி விழாவும். மற்றும் ஆடிப் பூரகர்ம விழாவும், மார்கழி மாதத்தில் திருவெம்பாவை, திருவாதிரை உற்சவங்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

12 - 05 - 1986 ஆண்டு தொடக்கமாக கேதாரகௌரி நோன்பு விரதம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் அமைதி வேண்டி திருமுறை ஒதுதலும் நடைபெற்றுவருகின்றது.

### ரதங்கள்

ஒரு வாசல் கொண்ட சிறிய மஞ்சம் 1968ஆம் ஆண்டிலும், புதிய சப்பை ரதம் 1965 ஆம் ஆண்டிலும், புதிய சித்திரத் தேர் 1971ஆம் ஆண்டிலும் வெள்ளோட்டம் நடைபெற்று மகோற்சவ காலங்களில் பாவிக்கப்பட்டு வருகின்றன.

1986ஆம் ஆண்டில் அன்ன தான சபை உருவாக்கப் பெற்று வருடா வருடம் விழாக் காலங்களில் அன்னதானம் குளிர்த்தி முதலியன நடைபெற்று வருகின்றன. சமய கலாசாரத்தை வளர்க்கும் நோக்குடன் ஆலயத்தில் சமய நிவுக்கு ஏற்ற அரிய நூல்கள் விறபனை செய்யப்படுகின்றன.

வாசல் திருமஞ்சத்தில் பவனி வரும் நல்நாளை எதிர் பார்த்து மஞ்சத்தின் நிர்மாண வேலைகள் 09-12-1992இல் ஆரம்பமாகியது. நிர்மாண வேலைகள் யாவும் பெரும் புகழ்பெற்ற சிற்பாச்சாரியர் ''சிற்பரத வித்தகர்'' திரு. ஆறுமுகம் சீவரைத்தினம் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிக்கொண்டு இருக்கின்றது. அழகு வண்ணத் திருமஞ்சத்தில் கூடிய விரைவில் அம்பிகை பக்த கோடிகளுக்கு காட்சி தந்து இஷ்ட சித்திகளை தந்தருளுவார்.

**க. வி. இராசரெத்தினம்,**
செயலாளர்,
திருமஞ்சத் திருப்பணி சபை

இளைஞர்களின் ஒத்துழைப்பினால் 1989ஆம் ஆண்டில் முறைமையான தொண்டர் சபை நிறுவப்பட்டது. அவர்கள் தொண்டுகள் போற்றுதற்குரியது. அவர்களின் பண்பு ஒருங்கிணைந்து செயலாற்றும் திறமை எல்லோராலும் போற்றக்கூடியதாக இருக்கின்றது. ஆலயத்துக்கு ஒரு பூந்தோட்டம் இப்போது உருவாகிவருகிறது.

### புதிய திருமஞ்சம்

ஸ்ரீ காமாட்சி அம்பாள், விநாயகர், பாலசுப்பிரமணியர் சமேதர்களாக மூன்று

இந்த தர்ம கைங்கரியம் நிறைவுபெற, ஆக்கமும், ஊக்கமும் தந்து, உறுதுணையாக இருந்து நின்று பொருள் வாரி வழங்கியவர்கள் மேன் மேலும் சிறப்புற்று அம்பாளுக்கு வாரி வழங்கவும் மற்றும் உதவிகள் வழங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் அம்பிகை அருள் பாலிப்பாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!
ஓம் சாந்தி!!!

★

## ஆலய பிரதம குருக்களின் வாழ்த்துச் செய்தி

உலோக மாதாவாகிய அன்னை ஆதிபரா சக்தியானவள் வண்ணை குளங்கரை மருதடியில் ''ஸ்ரீ காமாக்ஷி'' எனும் திருநாமத்துடன் எழுந்தருளி தன்னை வழிபடும் அடியார்களின் இன்னல் தீர்த்து இன்னருள் புரிகின்றாள் காமாக்ஷி என்றால் கருணைக் கண்ணையுடையவள் என்பது அர்த்தம். தனது அருட்கண் பார்வையினால் ருளை அள்ளித் தெளித்து அருள் வெள்ளத்தில் நம்மை திளைக்க வைப்பாள்.

தாயிடம் கேட்டுப் பெற முடியாதது ஒன்றில்லை. அழுதால் பெறலாம் என்றபடி வேண்டுவார் வேண்டுவதை வேண்டிய எண்ணம் ஈபவள் அன்னை. அழுக்கு நீங்கி ஆணவ இருள் விலகி ஒளிமயமான வாழ்வு மலர அன்னை காமாக்ஷி அருள்வாளாக.

சித்திரத் தேரில் அமர்ந்து சிங்காரப் பவனி வரும் காமாக்ஷி அம்பிகை சிந்தனை செய்து வந்தனை புரியும் அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்க அவளருளையே வேண்டி ஆசி கூறுகின்றோம்.

அழகுக்கு அழகூட்டும் ஆபரணத் தொழிலாளர் தம் அளப்பரிய அரும்பணியால் அழகுற மிளிரும் அம்பிகையின் அருளாலயம் மென்மேலும் அருட்பொலிவோடு அதிசிறந்து விளங்க வேண்டும் என்று அருளாசி கூறி அமைகின்றேன்.

வணக்கம்

''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்''

- கிரியாகலாபமணி சிவஸ்ரீ பா. பஞ்சாட்சரக் குருக்கள்.
வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்.

## ...முடியாக் கோலங்கள்!

... மரங்க ளெங்கே
...ந்தி கொங்கை திருகி
... அம்மை முன்னே
...மல் இப்போ எங்கே?

...ம் மருங்கே செல்லும்
...ன்துறைச் சாலை நீளும்
..., ஆடும் வேறும்
...ன்னுள குளத்தில் சேரும்!

... வீதி முன்னால்
...சல்லும் பல்கலைக் கழகம்
... பொற்கொல் லோசை
...வக்கும் எந்த நாளும்!

...ழதில் விண்ணில் பறக்கும்
... நெஞ்சை அதிர வைக்கும்
...ல நாள் குந்தி இருந்த
...தேர்முட்டிப் பக்கம் கண்டோம்!

...மாட்சி அன்னை கோவில்
...ாலம், காலங்க ளென்க
...ாக் கோலம் கண்டே
...கோபுரம் இன்றெழும் காட்சி!

— கவிகரன்.

மலர் ஏற்பாடு
ச. நந்தகோபால்



மலரமைப்பு:
த. பரமலிங்கம்


பாராள தமிழினம் இனி
**தேரேறி வாருமம்மா**

**சங்கீதா**
நகை மாளிகை
198, கஸ்தூரியார், வீதி,
யாழ்ப்பாணம்,

**பேபி போட்டோ**
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**சரவணமுத்து**
கந்தசாமி அன் சன்ஸ்
நகை தொழிற்சாலை
947, கே. கே. எஸ். வீதி,
தட்டா தெரு,
யாழ்ப்பாணம்.

**சிவா**
எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்
635 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**வெல்கம்**
சேல்ஸ் சென்ரர்
978, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**வேலாயுதபிள்ளை**
அன் சன்ஸ்
960, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணபிள்ளை**
அன் சன்ஸ்
591, கே. கே. எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**ஞானம்**
புத்தக நிலையம்
635, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**றெக்ஸ்**
போட்டோ கிறாபர்
606 (918),
கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**கந்தையா நாகராசா**
பலசரக்கு மாளிகை
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**ஷகி சலூன்**
லேடிஸ் அன் ஜென்ஸ்
596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**யாழ் - உலர்**
**சலவையகம்**
644, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**மங்களம்**
அழகு சாதன நிலையம்
770, தட்டா தெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
நா. பாலபாஸ்கரன்

**ஆனந்தா**
மோட்டோர் ஸ்ரோர்ஸ்
177, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ ரகு ராம ஜெயம்**
2, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**சன்ஸ்ரார் ஜுவல்லறி**
147 B (337),
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**தவம் ஸ்ரோர்ஸ்**
1004, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ வேலும் மயிலும்**
54, நியூ மார்க்கட்
யாழ்ப்பாணம்.

**குறிஞ்சி மெடிக்கல்ஸ்**
அன் குறோசரீஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,

காமாட்சி அன்னை தேரேறி வந்து அருள் பாலிப்பாளாக!

★ **லிங்கம் கூல்பார் அன் கபே** ★

52, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

ஆலய பாவனைக்காக (.5K. VA.—1.5K VA ) மண் எண்ணெயில் இயங்கக்கூடிய ஜெனரேட்டர் தேவை. தொடர்பு: மெதடிஸ்த திருச்சபை, CLS புத்தகசாலை, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4968)

## சீயாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சீயாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். (25333)

## சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர கல்வி, விவாக, தொழில் தடைகள் நீங்க சாந்தி பரிகாரங்கள் கூறப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை சோதிட நிலையம், இல.158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25486)

## பப்படம்

ஆனந்தம் அம்மாமி, உங்கள் மங்கள வைபவத்தை மெருகூட்டுவதற்கு நற்சுவை உணவு படைக்க 100 வீத சுத்தமான விசேட தயாரிப்பு எங்கும் கிடைக்கும். தயாரிப்பாளர்:- ஸ்ரீசச்சிதானந்தா என்ரர் பிரைசஸ், ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி. (25456)

## ஒத்துமாறல்

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற Mutual Transfer) விரும்புகிறார். தொடர்பு: இல. 40/4, கோவில் வீதி, சுண்டிக்குளி. (25500)

## விமானப்படை சிப்பாய் தற்கொலை

கொழும்பு, மே 04

திருமணம் முடித்து ஒரு மாதத்தின் பின் கடமைக்குத் திரும்பிய விமானப்படை சிப்பாய் ஒருவர் கடமையில் இருந்த சமயம் ரி - 56 துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த வெள்ளி இரவு இரத்மலானை விமான நிலையத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது.

நிட்டம்புவைச் சேர்ந்த கருணாரட்ன (வயது 28) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார். திருமணத்தினால் ஏற்பட்ட தோல்வியே தனது மரணத்திற்குக் காரணம் என அவர் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## ஆவணப்படுத்தல்

1984 – 1990 வரை வெளியிடப்பட்டு வந்த வீரவேங்கை பத்திரிகையை நாம் ஆவணப்படுத்த (பாதுகாக்க) விரும்புவதால் இப் பத்திரிகை வைத்திருப்பவர்கள் இதனைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி;
மாவீரர் படிப்பகம்
பலாலி வீதி, கோண்டாவில்.
(25485)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## முறைசாராக் கல்வி - ஆங்கிலம்

மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் 10-05-1993 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும், மேலதிக விவரங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ. மகேந்திரன்,
அதிபர்.

30 - 04 - 993.

(சி-5063)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 10 — 1962



மறைவு: 03 — 05 — 1989

### நாகராசா தெய்வேந்திரன்
(யாழ்/ பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்)

திதி: 04—05—1993

தேன்களுக்குத் தாமரைபோல் தெய்வேந்திரா
தித்திக்குமினிமை கொடுத்திடுவாய்
சித்திக்கும் சிறப்புகள் நிறைய செய்து
சிறப்புடனே பாரினில் கல்வி பயின்றாய் - உன்
கையில் பட்டம் எடுக்க முன்னரே
கடும் தூரம் சென்று விட்டாய் – எம்மை விட்டு
சென்ற நாளோ நாலாண்டாகி – உமக்கு
சிந்தும் மலரோ கண்ணீர்ப் பூக்கள்.

உன் பிரிவால் வாடும்;
பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள்.

ஊர்காவற்றுறை கிழக்கு,
ஊர்காவற்றுறை. (25508)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 08 — 02 — 1927



மறைவு: 04 — 03 — 1993

### அமரர் சீ. சின்னத்துரை
(மாவட்டப் பொறியியலாளர் காரியாலயம், புகையிரத நிலைய இலிகிதர் - அனுராதபுரம்)

"நெருநல் உளொருவன் இன்றில்லை என்றும் பெருமை உடைத்து இவ்வுலகு"

எமது குடும்ப ஒளிவிளக்கு திரு. சின்னத்துரை அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது துக்கம் பகிர்ந்தோர், அனுதாபச் செய்தி அனுப்பியோர், உடனிருந்து உதவியோர் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

மனைவி: சி இரத்தினம்
மருமகன்: சி ஆனந்தராஜா (பிரான்ஸ்)
மகள்: சி சிறீஸ்கிதா
மகன்: சி. கோகிலதாசன் (பொறியியலாளர் - பிரான்ஸ்)
சி. நிரஞ்சன் (குவைத்)
சி. தாமரைக்கண்ணன் (மாணவன்),
உற்றார், உறவினர்கள்.

"இரத்தின வாசம்",
ஸ்ரேசன் வியூ,
சுன்னாகம். (5908)

## JAFFNA DISTRICT GOVT. SCHOOLS
## PART-TIME ENGLISH TEACHERS, ASSOCIATION

மேற்படி சங்க விசேட பொதுக்கூட்டம் 09-05-93 (ஞாயிறு) காலை 9 மணிக்கு யா/கனகரட்ணம் ம. ம. வி மண்டபத்தில் நடைபெறும். சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் பங்குகொள்ளவும். ஆண்டு சந்தா ரூபா 50/- மண்டபத்தில் செலுத்தலாம்.

S. இராமநாதன் (தலைவர்)
80, செட்டித்தெரு,
நல்லூர்.

ச ஆ கோபாலமூர்த்தி (செயலாளர்)
சாவகச்சேரி.

[25502]

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 05 — 1944

உதிர்வு: 15 — 04 — 1992

### திருமதி புஸ்பராணி சிவசுப்பிரமணியம்

திதி: 04 - 05 - 1993

ஓராண்டு சென்றாலும் தாயே! உங்கள் அன்பும், ஆதரவும் என்றுமே எங்கள் மனதை விட்டு அகலாது நிலைத்திருக்கும்.

தாயன்பு இல்லாது தவிக்கின்றோம் அம்மா!

கணவன், பிள்ளைகள்,
தாய், தங்கை மற்றும் உறவினர்கள்.

"அயோத்தி",
அச்செழு, நீர்வேலி. (25512)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகமணி சிவஞானம்

அன்னை மடியில்: 30 — 05 — 1944

உதிர்வு: 12 — 05 — 1987

குடும்ப ஒளிவிளக்காய் மிளிர்ந்து, தலைக்கு தலை மகனாய் விளங்கிய செல்வமே! நினைவலைகள் நெஞ்சங்களில் மோதவிட்டு தாங்காத இரவுகளை துக்கத்தில் ஆழ்த்திவிட்டு, எம்மைப் பிரிந்து ஆண்டு ஆறு மறைந்தாலும், உமது அன்பு முகமும் ஆசை மொழிகளும் எங்கள் நெஞ்சங்களில் என்றும் மாறாது நினைத்திருக்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர்,
மனைவி மகன்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள்.

(6145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தேர்தல்கள் தேவையா?

தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரேமதாசாவின் கொலையைத் தொடர்ந்து தெற்கில் கலவரம் வெடிக்கக் கூடும் என்ற அச்சத்தினால் இந்த ஏற்பாடு. குழப்பம் வராமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக, தமிழர்களைக் கொல்வதற்கென்று வடக்கு - கிழக்கில் நிறுத்தப்பட்டிருக்கும் ஆயுதப் படையினரில் ஒரு பகுதியினரும் தெற்கே அழைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கில் குழப்பங்களும், கலகங்களும் தடுக்க முடியாதவை என்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது. எனினும் மாகாண சபைத் தேர்தல் நடக்க வேண்டும் என்பதில் அங்குள்ள அரசியல்வாதிகள் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள். மக்கள் கலவரங்களில் ஈடுபட்டால் என்ன, செத்தொழிந்தால் என்ன தமக்குப் பதவி கிடைத்து விட்டால் போதும் என்ற நோக்கம் அவர்களுக்கு.

அடுத்தடுத்து இரண்டு அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்ட பின்னரும் பதற்ற நிலையில் பதவியைப் பிடித்துவிட வாழும் தலைவர்கள் அவசரப்படுகிறார்கள்!

இரண்டு படுகொலைகளும் நடந்திருப்பதனால் உருவாகியுள்ள கொந்தளிப்பு நிலை தமக்குச் சாதகமாக அமையும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்! எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதில் ஜனாதிபதியைச் சந்தித்து மாகாண சபைத் தேர்தலைப் பின்போடக் கூடாது என்று வற்புறுத்தியிருப்பது தெற்கின் அரசியல் தலைவர்களுக்கு மக்களைவிட தங்க பதவிகளிலேயே கவனம் அதிகம் என்பதை எவ்வித சந்தேகமும் இன்றி நிருபிக்கிறது.

நாட்டின் சனநாயக நிர்வாக அமைப்பில் மாகாணசபைகள் பெரும் முக்கியம் வாய்ந்தவை என்பதல்ல. நாடாளுமன்றத்தைப் போல நிர்வாகச் செயற்பாட்டுக்குப் பிரதானமான ஒன்றல்ல. தமிழர்கள் தன்னாட்சித் தனி அரசு கேட்டதற்குப் பதிலாக, உப அரசு எதனையும் கேட்காத சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட வெள்ளையானை அது. வட்டுக்கோட்டைக்குப் போகும் வழியைக் காட்டுங்கள் என்று கேட்டவரிடம் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்று பதிலளித்தது போல உருவானவையே மாகாணசபைகள். அவற்றின் தேர்தலை ஒத்திவைப்பதால் நாட்டு நிர்வாகமோ, செயற்பாடோ தலைமூழ்கிவிடப் போவதில்லை.

தேர்தல் என்பது அமைதியான சூழலில் நடக்கவேண்டியது. மன அச்சத்துடன் இருக்கும் மக்கள் தமது வாக்குகளை உரிய விருப்பப்படி அளிக்க இயலாது. பதற்றமான சூழ்நிலையில் பலர் வாக்களிப்பதற்கே செல்லமாட்டார்கள். வன்முறைகளில் ஈடுபடும் சுபாவம் உள்ளவர்களும் அவற்றை எதிர்கொள்ளும் மனபலம் உள்ளவர்களும் மட்டுமே வாக்களிக்கச் செல்வர். அத்தகைய மக்கள், வாக்காளர்களில் மிகக் குறைந்த சதவீதத்தினராகவே இருப்பர். அவர்களால் தெரிவுசெய்யப்படுவோர் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக முடியுமா?

இவற்றைப் பற்றியெல்லாம் அரசியல்வாதிகளுக்கு என்ன அக்கறை? அவர்களுக்குப் பதவியும் அதிகாரமும் கிடைத்துவிட்டால் போதுமே!

அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகள் என்பது உண்மைதான். அதற்காக மக்கள் அல்லோலகல்லோலப்படும் போது தேர்தல் ஒன்று தேவைதானா? அது மேலும் குழப்பங்களைத் தூண்டுவதற்காகவா?

## விளையாட்டு நிகழ்வுகள்

''ஷப்றா'' கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 ஆவது வருடாந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை காலை யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகுகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட முப்பது ஓவர்களைக் கொண்டதாக முதற்சுற்று ஆட்டங்களும் —

இறுதியாட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாகவும் நடத்தப்படவிருக்கின்றன.

நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் [புளூஸ்] அணி மோதும்.

பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுப்பர் ஸ்டார் வி. க. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் [சொக்ஸ்] அணி மேதும்.

இதேவேளை —

இச்சுற்றுப்போட்டியின் மற்றோர் ஆட்டம் நாளை பிற்பகல் 1 30 மணிக்கு சொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்வாட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதும்.

தொடர்ந்து 6, 7, 8, 9 மற்றும் 15, 16 ஆம் திகதிகளில் இச்சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும்.

விலகல் முறையில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் 14 கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

o o o

''உதயன்'' ஆதரவில் யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு :—

★ பிற்பகல் 3 மணி:— பற்றிஷியன் (கோல்ட்) அணி எதிர் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி.

★ மாலை 4 மணி :— ஷப்றா அணி எதிர் சென்றலைட்ஸ் [புளூஸ்] அணி

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஸ்கந்தா ஐ. வி. க. அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் வி. க. அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [உ]

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 4

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பகுதியின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த— ''போராட்ட காலத்தில் விவசாயம் — வடதமிழீழத்தில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவது பிரச்சினையான ஒருவிடயமல்ல'' என்ற தலைப்பிலான — கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 4

தேசிய கல்வி நிறுவனத்தின் 93/94 ஆம் ஆண்டு கல்விப் பட்டப்பின் கல்வி நெறிக்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிகு தமது ஆவணங்களுடன் யாழ். கல்வி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (உ-3)

### பாஷாபிவிருத்தி பரீட்சை

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழ், இந்து நாகரீகம் ஆகிய பாடங்களில் நடத்தும் முன்னோடித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகளின் வசதி கருதி, பாடசாலை அதிபர்கள் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்பாக கல்வித் திணைக்களத்தில் பெறுமாறு பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ 3)

### ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம், மே 3

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ள ஆய்வரங்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் காலை 8-30 மணிக்கும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் காலை 7மணிக்கும் நடைபெறும். (அ)

### படையினர் சூடு இளைஞர் காயம்

வீதியால் சென்று கொண்டிருந்தவர்களை நோக்கிப் பதுங்கியிருந்த இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்

வவுனியா — மன்னார் வீதியில் கடந்த வியாழன் காலை 7 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

வவுனியா ஓமந்தையைச் சேர்ந்த பாரதமணிமூர்த்தி (வயது 19) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

### இன்று

பாலர் பாடசாலை பிள்ளைகளின் உடல், உள நலன்கள், பிரச்சினைகளை அணுகுவது எப்படி என்பதை மையமாகக் கொண்டு கடந்த 20, 21ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

இந்தப் பயிற்சி நெறியை யாழ். மாநகரசபை சுகாதார வைத்தியப் பகுதினர் நடத்தியிருந்தனர். (உ-3)

### நாளை

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நாளை புதன்கிழமை காலை 10 30 மணிக்கு நடைபெறும்.

கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலய அதிபர் திரு. வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பூஜை, பஜனை சொற்பொழிவு ஆகியன இடம் பெறும். (க)

o o o

மருதனாமடம் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 8-30 மணி முதல் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். (உ-152)

o o o

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் பௌர்ணமி கலை விழாவும், பரிசளிப்பு வைபவமும் நாளை புதன் மாலை 6-30 மணிக்கு நிலைய திறந்த வெளியரங்கில் நடைபெறும். (உ-30)

## இந்தியாவின் உண்மையான நண்பன் பிரேமதாசா!

### அஞ்சலி உரையில் ராவ்

இந்தியாவின் உண்மையான நண்பர் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா அந்த வகையில் நாம் அவரை நினைவு கூருகின்றோம்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்றுக் காலை லோகசபையில் அஞ்சலி செய்யும் போது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

சார்க் அமைப்பிற்கும் வறுமை ஒழிப்புத் துறையிலும் ஜனாதிபதி பிரேமதாசா அரும்பணியாற்றினார்.

சார்க் அரங்கம் உன்னதமான தலைவர் ஒருவரை அவரின் மறைவின் மூலம் இழந்து விட்டது

இவ்வாறு பிரதமர் ரரவ் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் பேசிய பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அடல்பிஹாரி வாஜ்பாய்— ''சமாதானத்தைக் காண விளைந்த ஒரு தலைவர் மீண்டும் வன்முறை மூலம் நம் மத்தியில் இருந்து அகற்றப்பட்டு விட்டார். இச்செயல் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டும்'' — என்று சொன்னார்.

லோகசபை நேற்றுக் காலை கூடியதும் ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியது அதனைத் தொடர்ந்து சபை வேறு அலுவல்களைச் செய்யாமல் ஒத்திவைக்கப்பட்டது.

ராஜ்ய சபையும் அதன் தலைவர் நாராயணன் தலைமையில் கூடி பிரேமதாசாவின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தியது

அவருக்கு மரியாதை செலுத்து முகமாக ராஜ்ய சபை ஒத்திவைக்கப்பட்டது.

## பின்னால் இயங்கியவர் இன்று முன்னணிக்கு

'' தமது அரசியல் வாழ்க்கையில் இதுவரை பலமான ஒரு அரசியல்வாதியின் பக்கபலத்துடன் — அவரின் பின்னால் இருந்தே — செயற்பட்டு வந்தவர் டி. பி. விஜேதுங்க.

'' இந்த உயர்பதவிக்கு வருவதற்கு அவர் பெரிதும் விழைந்தவர் அல்ல. ஆனால் எப்படியோ நாட்டின் உயர் பதவிக்கு வந்து விட்டார். ''

பதில் ஜனாதிபதி டி பி விஜேதுங்கவை இவ்வாறு வர்ணித்தது பி. பி. ஸி.

விஜேதுங்க வயதானவர். 70 வயதுடைய அவர், கட்சியில் உள்ள ஆர்வம் மிக்க இளம் அரசியல்வாதிகளுக்கு நெடுங்காலம் தடையாக இருக்கமாட்டார்.

ஐ. தே. கவின் எம் பிக்கள் மற்றும் உயர் பிரமுகர்கள் இவரை இந்தப் பதவிக்கு தெரிவு செய்வதற்கு அவரது வயோதிபமும் ஒரு காரணமாகும்.

1989 இல் பிரதமர் பதவிக்கு லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்காவும் போட்டியிட்ட போது அப்பிரச்சினையைச் சமாளிக்க — இடைநடுவில் ஓர் இணக்கத்தை ஏற்படுத்த — பிரதமர் பதவிக்கு டி பி விஜேதுங்கவை நியமித்தார் பிரேமதாஸா.

அதேபோன்ற சூழ்நிலையில்தான் இன்றும் அவர் ஜனாதிபதிக்கு வருகிறார்.

ஆளும்கட்சிக்குள் பதவிக்கான இழுபறிகள் ஆரம்பிக்காமல் தவிர்க்கவே அவரை அவரது கட்சி இந்த உயர்பதவிக்கு தெரிவு செய்தது

940 இல் கீழ்நிலை அரசு ஊழியராகப் பணியாற்றிய விஜேதுங்க பின்னர் ஐ. தே. கவில சேர்ந்தார். பல அமைச்சர்களுக்குச் செயலாளராகப் பணியாற்றினார்

முதல் தேர்தலில் தோல்வியுற்ற அவர் 1965 முதன் முதலாக எம். பியானார்.

இவர் மென்மையானவர்; மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பவர்; முடிவு எடுக்க இயலாதவர் — என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

ஆனால் தன்னால் முடியும் என்பதை நிரூபிக்க அவருக்கு இப்போது வாய்ப்புக் கிடைத்திருக்கிறது — இப்படி பி பி ஸி. மேலும் குறிப்பிட்டது.

## இறுதிக் கிரியைகளில் ஹேமா பிரேமதாஸா

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் கொலையுண்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் றொனி குணசிங்க, பொலீஸ் அத்தியட்சகர்கள் சிறிமால் பெரேரா, சரத் மகிந்த ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நேற்று தனித்தனியாக கொழும்பிலும் மீரிகனவிலும் நடைபெற்றன.

மூன்று இறுதிச்சடங்குகளில் பிரேமதாஸாவின் துணைவியாரான ஹேமா பிரேமதாஸா, தனது மகளுடன் சென்று கலந்து கொண்டார்.

## 24 பேர் உயிரிழந்தனர்

ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுடன் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களில் ஏழுபேர் பொலிஸ் அதிகாரிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 38 என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

### கொலையாளி அடையாளம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை —

பிரேமதாஸாவின் கொலை சம்பந்தமாக பிரேமதாஸாவின் வீட்டுக்கு அருகில் உள்ள விடுதி உரிமையாளரும் அவரதுவேலையாளும் கைது செய்யப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான நியமனப் பத்திரங்களை கோருவதற்கான திகதி குறித்தும் இன்று நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்படும்.

நாடாளுமன்ற செயலாளர்நாயகம் நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வார்.

ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தால் நாடாளுமன்றம் 48 மணித்தியாலங்களுக்குள் கூடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இரகசிய வாக்கெடுப்பை நடத்தி, அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்

(பொலிஸ் திணைக்கள பிரதம லிகிதர்)

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (ஆசிரியர், வட்டுக்கச்சி மகாவித்தியாலயம்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியவாணியின் (ஆசிரியை, வட்டுக்கச்சி மகாவித்தியாலயம்) மாமனாரும், மலாயன் பென்சனர் சண்முகம் நவரட்னத்தின் மருமகனும் ஆவார்.

அவரது ஈமக்கிரியைகள் நேற்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
வ. சபாரத்தினம்

வட்டுகிழக்கு,
சித்தங்கேணி. (25520)

## செ. இரத்தினசபாபதி

சுழிபுரத்தைச் சேர்ந்தவரும், மல்லாகம் பங்களா ஒழுங்கையில் வசித்தவருமாகிய எமது மைத்துனர் செ. இரத்தினசபாபதியின் (முன்னாள் வித்தியாதரிசி, கொழும்பு) ஈமக்கிரியைகள் கிரிலப்பனையில் 3-5-93 இல் நடைபெற்றன.

அ. ஜெகநாதன்
திருமதி இ. பாலசிங்கம்

நூல் நிலைய ஒழுங்கை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (25521)

வைத்திய கலாநிதி

## இரத்தினசபாபதி பாக்கியநாதன் ஜே பி.

2-5-1993 காலை காலஞ்சென்ற வைத்திய கலாநிதி இ. பாக்கியநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (4-5 1993) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு 90, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பொன்னையா (சகோதரர்)

பொன்னையா வைத்தியசாலை,
ஆடியபாத வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (25524)

திருமதி

## சண்முகரத்தினக்குருக்கள் விசாலாட்சி அம்மா

திருமதி சண்முகரத்தினக்குருக்கள் விசாலாட்சி அம்மா 3 5-93 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற சண்முகரத்தினக் குருக்களின் தர்மபத்தினியும், சோமாஸ்கந்தசர்மா (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் யாழ் கச்சேரி), இராமக்கிருஷ்ணசர்மா (இளைப்பாறிய தபாலதிபர்), பத்மாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இலட்சுமிஅம்மா, வரதலட்சுமி, மகாதேவசர்மா (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-5 93 மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச சோமாஸ்கந்தசர்மா
ச இராமக்கிருஷ்ணசர்மா

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
(5909)

## அப்பாத்துரை சுப்பிரமணியம்

[முன்னாள் மஸ்கன்ஸ் பிரதம காசாளர், கொழும்பு]

அப்பாத்துரை சுப்பிரமணியம் அவர்கள் 27 04-93 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், சீத்ததேவியின் அன்புக் கணவரும், சத்தியபாலன் (கனடா) சத்தியகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி பாலசிங்கம் லலிதாதேவி, மணிமொழிராஜா (Asbestos Cement Industries Ltd, Ratmalana) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம் (ரஜனி கிறிம் ஹவுஸ்), விஜயகுமாரி (Hatton Nationl Bank Colombo) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-05-1 93ல் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
T. பாலசிங்கம்

35, குருசோவீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம் [25523]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## நாடு திரும்பினார்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் நேற்று நாடு திரும்பினார். அவர் கண்ணீர்மல்க தந்தையின் உருவப் படத்துக்கும், சடலத்தை தாங்கியுள்ள பேழைக்கும் மலர்மாலை சாத்தி அஞ்சலி செலுத்தினார். (உ-3)

## தலைவர்கள் அனுதாபம்

கொழும்பு,மே 3

ஜனாதிபதி பிரேமதாசவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து உலகத் தலைவர்கள் பலரும் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்களில் பலரும் பிரேமதாசவின் படுகொலையைக் கண்டித்தும், அவரது திறமைக்கும் சேவைக்கும் அஞ்சலி செலுத்தியும் பதில் ஜனாதிபதிக்குச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டிஷ் மகாராணி, பிரிட்டிஷ் பிரதமர், சீனப் பிரதமர், ஜப்பானியப் பிரதமர், பிரெஞ்சு ஜனாதிபதி, ஆஸ்திரேலிய பிரதமர் ஆகியோர் அவர்களில் அடங்குவர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் ஆகிய தென்னாசிய நாடுகளின் தலைவர்கள் அனுப்பிய செய்திகளில் பிரேமதாசா சார்க் நாடுகளின் சங்கத்துக்கு ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்தனர்.

வியட்நாம், நோர்வே, எகிப்து, பின்லாந்து, இத்தாலி, தாய்லாந்து, நியூசிலா ஆகிய நாடுகளின் தலைவர்களும் தமது அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத்தும் தமது அனுதாபச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார். (அ)

## விசேட விடுமுறை

கொழும்பு, மே 4

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் வியாழக்கிழமை அரச, வர்த்தக, வங்கி விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

வியாழக்கிழமை ஏற்கனவே விடுமுறை தினமாக இருந்த போதிலும் இந்த விசேட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## ஈ பி டி.பி. அறிக்கை

கொழும்பு, மே 4

பாசிச எதிர்ப்புப் போரில் ஜனாதிபதி பிரேமதாசா தன்னுயிரை ஈந்தார்

ஈ பி டி பி. வெளியிட்ட அனுதாப அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மீது சுமத்தப்பட்ட அவதூறுகளை தமது இரத்தத்தினால் அழித்து தமது நேர்மையை பிரேமதாசா வெளிப்படுத்தினார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (த-எ)

## விமான எதிர்ப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசைக் கோரியுள்ளது.

சென்னையில் முதலமைச்சரின் வீடு அமைந்திருக்கும் பகுதியை விமானம் ஏதும் பறக்கக்கூடாத பகுதியாக அறிவித்து, இந்திய விமானப் படையின் மேற்பார்வையில் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சரின் வீட்டை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்று அஞ்சப்படுவதை அடுத்தே இக்கோரிக்கையை தமிழக அரசு விடுத்திருக்கிறது. (உ-எ)

# எனது நற்பெயரை கொன்று விடாதீர்கள்!

## இறுதிக் கூட்டத்தில் பிரேமா

குண்டுத் தாக்குதலில் இறப்பதற்கு முதல் நாள் வெள்ளிக்கிழமை கிருலப்பனையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாஸா கூடடியாகப் பேசினார்.

அங்கு பேசுகையில் —

'என்னை சுட்டு அழித்து விட்டாலும், கொன்று விட்டாலும் பரவாயில்லை; ஆனால் எனது நற்பெயரை மட்டும் கொலை செய்து விடாதீர்கள்'' — என்று ஜனாதிபதி தெரிவித்தார். (த-எ)

புதிய வசதிகளுடன்

# வில்லூன்றித் தீர்த்தம் நாளைதிறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,மே4

யாழ். நகரில் அமைந்துள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற வில்லூன்றி தீர்த்தக் கேணி, அந்தியேட்டி மற்றும் ஆண்டுத் திவசக் கருமாதிகளைச் செய்வதற்கு ஏதுவாக நாளை முதல் உரிய வசதிகளுடன் திறந்து விடப்படவுள்ளது.

இதனையொட்டி பூரணை தினமான நாளை வில்லூன்றி விநாயகர் தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளும பெருவிழாவும் அங்கு இடம்பெறவுள்ளது. விழா முடிந்ததும் தீர்த்தக் கேணி பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும்.

நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த வில்லூன்றித் தீர்த்தக் கேணி— சுமார் 40 வருடங்களின் பின்னர் — அண்மையில் அமைக்கப்பட்ட தீர்த்தத் தல அபிவிருத்தி குழுவினால் புனரமைக்கப்பட்டு — சுத்திகரிக்கப்பட்டு — மீண்டும் மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படுகிறது.

1988 ஆம் ஆண்டு அந்தியேட்டி மடங்கள் புதுப்பிக்கப்பட்டு அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று வந்த போதிலும் தீர்த்தக் கேணி நீண்ட காலமாக அழுக்கு அகற்றப் படாதிருந்தமையாலும், கடற்கரைப் பிரதேசம் மிகச் சுகாதாரக் குறைவாக இருந்தமையாலும் பொதுமக்கள் பல சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

இதனை கருத்திற்கொண்டு இப்போது தீர்த்தக் கேணி சுத்தப்படுத்தப்பட்டுள்ளதுடன், புனித தீர்த்த வளாகத்திலேயே புதிய பாதையும், இறங்கு துறையும் அமைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் அந்தியேட்டி செய்பவர்கள் அஸ்தி, கல் ஆகியவற்றை கடலில் இலகுவாக சங்கமிக்கச் செய்ய முடியும். (அ-5)

யாழ் இந்துமகளிர் கல்லூரி

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

தவிர்க்க முடியாத காரணத்தினால் 05-05-93 புதன்கிழமை நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.

- தலைவர்.

(25417)

# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

### உபபரிசோதகர்/காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:- 8ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த (உயர்தரம்) வரை

உயரம் :- 5' 6''

வயது :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 15 05 93 ஆந் திகதி வரை பழைய பூங்கா காவல்துறை அலுவலகத்துக்கு நேரடியாக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்வுக்கு அழைக்கப் படாதவர்களும் உடனடியாக சமுகம்தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

நடுவப்பணியகம்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.
03.05.93
(சி/5084)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org